2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வத்தலக்குண்டு வெடி விபத்து.

* 111 வினா.—திரு. சோ. ஆறுமுகம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980 ஆகஸ்டில் மதுரை மாவட்டம், வத்தலகுண்டில் ஏற்பட்ட வெடி விபத்தில் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) இறந்தவர்கள் குடும்பங்களுக்கு அரசு அளித்த உதவி யாது ?

(உ) இறந்தவர்களுடைய உழைப்பால் வாழ்ந்து கொண்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(எ) அத்தகைய குடும்பங்களுக்கு அரசு தனியாக உதவி ஏதும் அளித்ததா ?

(ஐ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

துணைத் தாசில்தார் பதவிகள்.

* 112. வினா—திரு. சோ. ஆறுமுகம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பிற மாவட்டங்களிலுள்ள வட்ட அலுவலகங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கூடுதல் துணைத் தாசில்தார் பதவிகள், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வட்ட அலுவலகங்களுக்கு அளிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அம்மாவட்டத்தில், அப்பதவிகளை ஏற்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அம்மாவட்ட ஆட்சித் தலைவரால், புள்ளி விவரத்தின் அடிப்படையில் கோரப்பட்ட, மூன்று துணை வட்டாட்சியர் பதவிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

@ 93-94 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.